[illegible] நூலகம்

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

Y. M. C A

உதயன்

விலை
ரூபா
5-00

சுடர் 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 18 வியாழக்கிழமை (03-12-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 07

அநுராதபுரம் — மன்னார் எல்லையில் சமகாலத்தில்

புலிகளின் அதிரடித் தாக்குதல்களில் 13 ராணுவத்தினர் 2 பொலீஸார் பலி

40க்கும் மேற்பட்டோர் காயம்

யாழ்ப்பாணம், டிசம்பர் 3

அநுராதபுரம்—மன்னார் எல்லைப் பகுதியில் உள்ள கட்டுப்பொத்த, வீரவில, ஹந்தபாங்கொட ஆகிய இடங்களில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தின் முன்னணிக் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை ஒரே சமயத்தில் நடத்திய அதிரடித்தாக்குதல்களில் 13 இராணுவத்தினரும் 2 பொலிஸாரும் கொல்லப்பட்டனர். 40க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

இந்த மூன்று இடங்களிலும் ஒரே நேரத்தில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி இருந்தாலும்—

கட்டுப்பொத்த ராணுவ முகாமே விடுதலைப் புலிகளின் பிரதான இலக்காக இருந்தது என்றும்— இராணுவத்தினரின் கவனத்தைத் திசை திருப்பவே ஹந்தபாங்கொட வீரவில இராணுவ முகாம்களையும் விடுதலைப் புலிகள் தாக்கி இருக்கக்கூடும் என்றும் இராணுவம் கருதுவதாகவும் வெரித்தாஸ் அறிவித்தது.

கடந்த ஐந்து மாத காலத்தில் கட்டுப்பொத்த ராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இரண்டாவது தாக்குதல் இதுவாகும்.

இம்முகாம் மீது ஜூலை மாதம் 11 ஆம் திகதி விடுதலைப்புலிகள் நடத்திய முதலான தாக்குதலில் 47 ஆயுத படையினர் கொல்லப்பட்டனர்.

நேற்று இடம்பெற்ற தாக்குதல்கள் சுமார் மூன்று மணி நேரம் நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-எ-6-5)

படகுச் சேவை தொடர்ந்து பாதிப்பு

யாழ்ப்பாணம், டிச. 3

கிளாலிப் போக்குவரத்து நேற்றும் சீர்குலைந்திருந்ததாகத் தெரிய வந்தது.

பொருள்கள் ஏற்றி வந்த ஒரு சில படகுகள் மட்டும் நேற்று கிளாலிக்கு வந்தன என்றும் —

பயணிகள் படகுகள் எதுவும் சேவையில் ஈடுபடவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

படகுச் சேவை தொடர்ந்து பாதிக்கப்பட்டிருப்பதால் கொழும்பில் இருந்து வந்த நூற்றுக்கணக்கான பயணிகள், படகுச் சேவையை எதிர்பார்த்து நல்லூரில் காத்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-3-17)

மட்டக்களப்பில் 2 போராளிகள் வீரமரணம்

கொழும்பு, டிச. 3

மட்டக்களப்பு மாவட்டம் மகிழவெட்டுவான் என்னுமிடத்தில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் இருவர் வீரமரணமடைந்தனர்.

மேஜர் அபயன் (கிருஷ்ணமூர்த்தி சிவகுமார் - தெல்லிப்பழை கிழக்கு), இரண்டாம் லெப்டினன்ட் மதிமுகன் அல்லது நவாஸ் (இளையதம்பி அரியநாயகம் - பெரியபுல்லுமலை) ஆகியோரே வீரமரணமடைந்தவர்கள் ஆவர்.

எங்கேயும், எப்போதும் தாக்குதல் நடத்த வல்லவர்கள் புலிகள்!

'ஒப்சேர்வர்' பத்திரிகை விமர்சனம்

கொழும்பு, டிச. 3

விடுதலைப் புலிகள், எப்போதும், எங்கேயும் தாம் விரும்பும் சமயத்தில் தாக்குதல் நடத்த வல்லவர்கள் என்பது தெளிவாகி உள்ளதாக அரச சார்புப் பத்திரிகையான "ஒப்சேர்வர்"ன் ஞாயிறு இதழில் வெளியான விமர்சனக் கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுருத்த திலகசிறி எழுதிய அந்த விமர்சனக் கட்டுரையின் சில பகுதிகள் வருமாறு:-

கொழும்பு நகரில் கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ கொல்லப்பட்ட சம்பவம் தெரிவிக்கும் செய்தி தெளிவானது;

எப்போதும் எங்கேயும் தாம் விரும்பும் சமயத்தில் தாக்குதல் நடத்த வல்லவர்கள் விடுதலைப் புலிகள் என்பதே அச்செய்தியாகும்; ஒருவருக்கும் பாதுகாப்பு இல்லை; கொழும்பு மாநகரின் மத்தியிலும் கூட பாதுகாப்புக் கிடையாது.

தீர்க்கமான உறுதியுடன் இறப்பதற்குத் துணிந்த தற்கொலைப் படையினரின் தாக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

வான்கடிதங்கள் கிழிந்த நிலையில் விநியோகம்

யாழ்ப்பாணம், டிச. 3

இம்முறை 'குமண' கப்பலில் வந்த கடிதங்கள் பல கிழிந்த நிலையிலேயே விநியோகிக்கப்பட்டன.

வான் கடிதங்களுக்கே இந்த நிலை ஏற்பட்டது.

கொழும்புத்துறை முகத்தில் வைத்து தபால் பொதிகள் படையினரால் சோதனையிடப்பட்ட போது இந்த வான் கடிதங்கள் கிழிக்கப்பட்டிருக்கலாம் என்று யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிழிக்கப்பட்ட வான் கடிதங்களை யாழ். பிரதம தபாலகம் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் துண்டு துண்டாக ஒட்டியே மக்களுக்கு விநியோகித்ததாகவும் —

கிழிக்கப்பட்ட தபால் உறைகளை யாழ். பிரதம தபாலகம் மக்களிடமிருந்து சேகரித்து வருவதாகவும் —

இந்த தபால் உறைகளை கொழும்பு பிரதம தபால் அதிபருக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் —

அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-17)

திருமலையில் 9 தமிழர் கைது

யாழ்ப்பாணம், டிச. 3

திருமலை மாவட்டம் நிலாவெளி, கோபாலபுரம் என்னும் பகுதியில் கடந்த 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை இராணுவத்தினர் பெரும் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்றும்—

அச்சமயம் ஒன்பது தமிழர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர் என்றும்— அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

கோபாலபுரத்தைச் சேர்ந்த பழனித்தம்பி சுந்தரலிங்கம் (வயது 60), மூன்று பிள்ளைகளின் தாயாரான விஜிதா (வயது 29), ஆ. பேரின்பராசா (வயது 30), ஆ. அனந்தா (வயது 25) திருமதி தங்கராசன் (வயது 50), ஆ. காளியப்பு (வயது 70), செல்லத்துரை (வயது 40) கந்தசாமி யோகம் (வயது 34) முத்துக்குமார் (வயது 40) ஆகியோரே படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் ஆவர். (இ-5)

றெட்பானா பிரதிநிதிகள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், டிச. 3

றெட்பானா உதவி நிறுவனத்தின் அதிகாரிகள் இருவர் நேற்று யாழ். வந்துள்ளனர்.

றெட்பானாவின் கொழும்பு அலுவலகப் பிரதிநிதி திரு. ஒப்ஸண்ட், கிரேஷ் திட்ட இணைப்பாளர் திரு. எஸ். சேதிராஜா ஆகியோரே இந்த இருவரும் ஆவர்.

கடந்த ஞாயிறன்று விமான மூலம் பலாலிக்கு வந்த இவர்கள் நேற்று 'குமண' கப்பல் மூலம் இங்கு வந்து சேர்ந்தனர்.

யாழ். மாவட்டத்தில் றெட்பானா நிறுவனம் மேற்கொண்டுள்ள நிவாரணப் பணிகள் தொடர்பாக அவர்கள் இங்கு பேச்சுநடத்துவர் என அறிய வந்தது (இ-5)

வடக்கு-கிழக்கு ராணுவத் தளபதிகள் மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்வு

கொழும்பு, டிச. 3

வடபிராந்திய இராணுவத் தளபதி பிரிகேடியர் ரோஹான் தலுவத்த கடந்த அக்டோபர் முதலாம் திகதியில் இருந்தும்—

கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதி பிரிகேடியர் லக்கி அல்கம கடந்த ஆகஸ்ட் முதலாம் திகதியில் இருந்தும் மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அரசு அறிவித்துள்ளது.

பிரிகேடியர்களாக ஐந்து இராணுவ அதிகாரிகள் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ-5)

கொப்பேகடுவ மரணம் குறித்து விசாரிக்க சர்வதேச நீதி விசாரணைக் குழு

மனைவியின் குற்றச்சாட்டை அடுத்து அறிவிப்பு

கொழும்பு, டிச. 3

அராலித்துறையில் லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவும் மற்றும் எட்டுப் படை அதிகாரிகளும் கொல்லப்பட்ட சம்பவத்துக்குக் காரணமான குண்டுவெடிப்புச் சம்பவம் குறித்து ஆராய சர்வதேச விசாரணைக் குழு ஒன்றை நியமிக்க ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்திருக்கிறது.

டென்ஸில் கொப்பேகடுவவின் மனைவி திருமதி லாலினி [illegible] குற்றச்சாட்டை அடுத்தே இந்த வகைய விசாரணை ஒன்றை நடத்தப்போவதாக அரசு அறிவித்திருக்கிறது.

கடந்த ஆகஸ்டில் கொப்பேகடுவவும் மற்றும் எட்டுப் படை அதிகாரிகளும் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்தனர் என்பதும்—

இந்தச் சம்பவம் தொடர்பாக அரசாங்கம் நியமித்த விசாரணைக் குழுவும் நிலக்கண்ணிவெடித் தாக்குதலிலேயே கொப்பேகடுவவும்

(8 ஆம் பக்கம் பார்க்க)



கம்ப்யூட்டர் கல்வி

★ BASIC ★ dBASE III+ ★ LOTUS 1-2-3
★ WORDSTAR 5-5 ★ COMPUTER TECHNOLOGY

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள் 4 — 12 — 92
சனி, ஞாயிறு வகுப்புக்கள் 5 — 12 — 92
O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
மேலதிக விபரங்கட்கு:

யுனிக்கோ
கம்ப்யூட்டர் சென்ரர்
37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கு
வடக்குப் பக்கமாக உள்ள
மேல்மாடியில்)
(இ/3844)

யா/கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி
பரிசளிப்பு விழா

1992—12—05 சனிக்கிழமை மு. ப. 9 00 மணி

பிரதம விருந்தினர்:- திரு. கா. மாணிக்கவாசகர்
(அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம்)

சிறப்பு விருந்தினர்:- திரு. இ. சிவானந்தன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
(மருதனார்மடம் - கல்விக்கோட்டம்)

பரிசில் வழங்கல்: திருமதி யோ. மாணிக்கவாசகர்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
பா. அ. சபையினர்.
(23482)

வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

1993 ஆம் ஆண்டிற்கான
கேள்வி அறிவித்தல்

1993 ஆம் ஆண்டிற்கு சந்தைகள், இறைச்சிக் கடைகள் ஆகியவற்றைக் குத்தகைக்கு விடுவது சம்பந்தமாக, 12 - 11 - 92 ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையில் வெளியான கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கமைவாக கீழ்க்குறிப்பிட்ட விவரப் பிரகாரம் கேள்விப் பத்திரங்களை வழங்கல், கேள்விகள் ஏற்றல், கேள்விகள் திறத்தல் ஆகியவற்றின் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்விப் பத்திரங்கள் வழங்கல்:- 1992 - 12 - 11ம் திகதி 12 00 மணி வரை
கேள்விகள் ஏற்றல்:- 1992 - 12 - 14ம் திகதி மு. ப 10.00 மணி வரை
கேள்விகள் திறத்தல்:- 1992 - 12 - 14ம் திகதி மு. ப 11 00 மணிக்கு

தனுஜா தணிகாசலம்.
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
02 - 12 - 92.
(சி-2514)

31ஆம் நாள் நினைவலைகள்
திருமதி ஜீவபாக்கியம் இராசரட்ணம்

மண்ணில்: 11—04—1927
விண்ணில்: 03—11—1992

எம் குடும்ப விளக்காக விளங்கித் திடீரென அணைந்து எம்மை மீளாத்துயரிலாழ்த்தி ஆண்டவன் திருவடியை அடைந்துவிட்ட எம் அன்னையின் 31ஆம் நாளை இன்று நினைவுகூருகின்றோம்

அன்னாரின் நல்லடக்க ஆராதனையில் பங்குபற்றியோருக்கும், தாமாக முன்வந்து உதவிகள் பல புரிந்தோருக்கும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
இ. ஸ்ரீபாலரட்ணம் (மகன்), மருமகள்,
பேரப்பிள்ளைகள்,

"தமயவிதாஸ்"
உடுவில்,
சுன்னாகம்.
(இ/3940)

இந்தியாவை தாக்கும் வலிமை கொண்ட அணுகுண்டுகள்

பாகிஸ்தான் சில மணி நேரத்தில் உற்பத்தி செய்யுமாம்

வாஷிங்டன், டிச 3

இந்தியாவைத் தாக்கும் வலிமை கொண்ட ஏழு அணுகுண்டுகளைச் சில மணி நேரத்தில் உற்பத்தி செய்து விடும் வலுவான நிலையில், பாகிஸ்தான் இருந்து வருகிறது.

அமெரிக்க செனட்டர் பிரெஸ்லர் இத்தகவலை வெளியிட்டார்.

இந்த அணுகுண்டுகளை பாகிஸ்தானால் விமானத்தில் ஏற்றி ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு எடுத்துச் சென்று வீசவும் இயலும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானிடம் அணுகுண்டு இருக்கும் தகவலை அமெரிக்கா உளவு நிறுவனமான சி ஐ ஏ தம்மிடம் கூறியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதியாக றொனால்ட் றேகன் இருந்த சமயம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உள்ள நிறுவனங்களிடம் இருந்து அணு ஆயுதப் பொருட்களை வாங்க திரு. றேகன் பாகிஸ்தானை அனுமதித்தார் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

பரிசளிப்பு விழாக்கள்

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி நினைவு மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகவும் — மருதனார்மடம் கோட்டக் கல்வி அலுவலக பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

★ ★ ★

யாழ்ப்பாணம், டிச. 3

கொட்டடி நமசிவாய வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறும். வித்தியாலய அதிபர் திரு. ஆ. சண்முகநாதன் வைபவத்துக்குத் தலைமை வகிப்பார். (இ)

சிவப்பிரகாச ம.வி. மாணவி முதலிடம்

மாவட்ட ரீதியில் அனைத்துப் பாடசாலைகளுக்கிடையே யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மனைப் பொருளியல் போட்டியில் சிறந்த இல்லத்தரசியாக சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி செல்வி இராசரத்தினம் கிரஞ்சினி முதல் இடத்தைப் பெற்றார்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி. சண்முகரத்தினம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற மனையியல் பொருட்காட்சியின் போது யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் இதற்கான பரிசினையும் சான்றிதழையும் வழங்கி பாராட்டுரை வழங்கினார். (ஒ)

குழந்தையை கைவிட்டுசென்ற பெண்

யாழ்ப்பாணம், டிச. 3

பெண் ஒருவர், தனது குழந்தையை யாழ். ஆஸ்பத்திரியில் கைவிட்டுச் சென்ற சம்பவம் நேற்று இடம்பெற்றது.

நோயாளர்களைப் பார்வையிடுவதற்காக மக்கள் பெரும் எண்ணிக்கையில் கூடிய நேரம் இச்சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

பிரஸ்தாப பெண், அருகில் நின்ற மற்றும் ஒரு பெண்ணிடம் தனது குழந்தையைப் பார்த்துக்கொள்ளும்படி கூறி வெளியே சென்றார் என்றும்— ஆனால் அவர் திரும்பி வரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிறந்து ஒரு வாரம் கூட ஆகாத இப்பெண் குழந்தை [illegible] மகளிர் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ-15)

ஷெல் தாக்குதல்களால் மக்கள் இடம்பெயர்வு

வலி. மேற்கு, டிச 3

மாதகலில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களையும், ஷெல் தாக்குதல்களையும் அடுத்து பனிப்புலம், வடலியடைப்பு, சுளிபுரம், பண்ணாகம், சித்தன்கேணி, சுளிபுரம் மேற்கு ஆகிய பகுதி மக்கள் பலர் தமது வீடுகளில் இருந்து இரவோடு இரவாக இடம் பெயர்ந்தனர்.

இராணுவத்தினர் ஏவிய ஷெல்கள் வயல்களிலும், வெறும் வளவுகளுக்குள்ளும் வீழ்ந்து வெடித்தன. (இ-175)

எங்கேயும் எப்போதும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குதலைத் தடுப்பது என்பது பெரும்பாலும் சாத்தியமற்ற காரியமாகும்.

கொழும்பு இனியும் பாதுகாப்பான பிரதேசம் இல்லை. முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகள், வர்த்தகப் பிரமுகர்கள், மத பிரமுகர்கள், பிரபலஸ்தர்கள், மற்றும் நானாந்த அலுவல்களில் ஈடுபடும் சாதாரண மக்களுக்கும் கொழும்பு இனியும் பாதுகாப்பான பிரதேசமாக இருக்காது.

புலிகளின் நோக்கம்

தெற்கில் அச்ச உணர்வு ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் மக்களை மற்றும் தலைவர்களை செயலிழக்கச் செய்வது, பின்னர் அவர்களை சரணடையச் செய்வது என்ற விடுதலைப் புலிகளின் முயற்சியில் இது ஓர் அம்சமாகும்.

கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோவைக் கொல்ல தெரிந்தெடுக்கப்பட்ட காலம், பொருளாதார வளர்ச்சியைத் தடுப்பதில் விடுதலைப் புலிகள் திட்டமிட்டுச் செயலாற்றுவதைக் காட்டுகின்றது.

அடுத்த தாக்குதல்

விடுதலைப் புலிகளின் அடுத்த தாக்குதல் ஒரு பொருளாதார இலக்காக இருக்கலாம். ஒரு வங்கி, ஒரு வர்த்தக வளாகம் அல்லது வேறு ஒரு வர்த்தகப் பிரதேசத்தில் அடுத்த தாக்குதல் இடம்பெறலாம்.

விடுதலைப் புலிகள் நடத்துவது ஒரு பூரண யுத்தமாகும். தங்களிடம் உள்ள வளங்கள் எல்லாவற்றையும் திரட்டி எல்லா இடங்களிலும் யுத்தத்தை நடத்தி வருகின்றனர். எக்ஸ்போ 92 கண்காட்சி நடந்த காலத்தில் கிளான்ஸி பெர்னாண்டோ கொல்லப்பட்டது, தெற்கில் சாதாரண பொருளாதார நடவடிக்கைகள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவற்றை எடுப்பதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

ஆகவே நாம் —

யுத்தம் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கவில்லை என்றும்—

அபிவிருத்தி வேலைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ள முடியும் என்றும் கூறி — எம்மை இனியும் ஏமாற்றிக் கொள்ள முடியாது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ)

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
1968—10—14

அரக்கன் அழிப்பு:
1989—12—07

திதி
03—12—1992

அமரர் செல்வன்
ஐயம்பிள்ளை தவராஜா (தவம்)

மூன்றாண்டு போனாலும் ஆறுமோ துயரம்
குறிக்கோளற்ற கயவரால் குதறப்பட்ட தவம்
பதவி வெறிபிடித்த துரோகிகள் உம்மை
படுகொலை செய்து விட்டார்கள் தணியுமோ உமது
தமிழீழ வேட்கை

உன்பிரிவால் வாடும்:
அம்மா, அப்பா, சகோதரர்கள்,
அத்தான், உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்;

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
(3943)

யாழ். கனகரத்தினம் ம. ம. வியின் உப அதிபர்

கே. வி. தனேஸ்வரனின் சேவை நலன்பாராட்டு

03—12—1992

சிறந்த செயல்வீரர்; பல்துறை வல்லுநர்

நிமிர்ந்த நன்னடை; நேர் கொண்ட பார்வை; புன்முறுவல் பூத்த முகம்; இனிய பேச்சு; எல்லோரையும் கவர்ந்திருக்கும் தன்மை.— இவற்றின் முழு வடிவமே எமது கல்லூரியின் பிரதி அதிபர் திரு கந்தையா வைத்திலிங்கம் தனேஸ்வரன்.

கே. வி. தனேஸ்வரன்

கடந்த பதினொரு ஆண்டுகளாக எமது கல்லூரியின் பிரதி அதிபராகவும் விளையாட்டுப் பொறுப்பாசிரியராகவும் பல்வேறு பதவிகளை அலங்கரித்த அவர் இன்று ஓய்வு பெறுகிறார்.

விளையாட்டுத்துறையில் லக்னோவில் பயிற்சி பெற்று முன்னணியில் விளங்கிய அவர், கலை, கலாசாரம், இலக்கியம் ஆகிய துறைகளிலும் அரும்பணியாற்றியவர். சிறந்த செயல்வீரர்; பாடசாலை நிர்வாகத்தில் முழுமையாகப் பங்களிப்புச் செய்தது ன் கல்லூரியின் புறச் செயற்பாடுகள் அனைத்தையும் நெறிப்படுத்துவதில் தன் முழு உழைப்பையும் வழங்கிய பல்துறை வல்லுநர்.

தமிழ் ஈழத்தின் தலைசிறந்த அறிவிப்பாளரான தனேஸ்வரனின் சிம்மக்குரல் எங்கும் ஒலிப்பதை யாவரும் அறிவர்.

எமது கல்லூரியின் விளையாட்டுத்துறையை முன்னெடுத்துச் செல்லவும், நிர்வாகத்தைத் திறம்பட செயற்படுத்தவும் அவர் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது.

அவர் சேவைக்கு பாடசாலை சமூகம் தன் நன்றியைத் தெரிவிப்பதுடன்; அவர் சகல சௌபாக்கியங்களுடனும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறது.

மு. இராமலிங்கம்,
அதிபர்,
கனகரத்தினம் ம. ம வி.

எம் பாடசாலையை கீர்த்தி பெற வைத்தவர்

அன்பான இன்முகத்துடன் ஒழுக்கம், கல்வி, கலை, விளையாட்டு மற்றும் சகல துறைகளிலும் பாடசாலை ஒரு கீர்த்தியான நிலையை அடைய கடந்த பத்து ஆண்டுகளாக அதிபர்களுடன் இணைந்து வெற்றிகள் பல கண்ட பெரியார் கே. வி. தனேஸ்வரன் அவர்கள்.

தன் நற்சிந்தனை மற்றும் வழிகாட்டுதல்கள் மூலம் என் ஆற்றலை பயன்படுத்தி பாடசாலையின் விளையாட்டுத்துறையை நாடே அறியச் செய்து என்னையும் தன் வாரிசாக வளர்த்தவர்; என்னை சகல துறைப் பயிற்சியாளராகவும் மத்தியஸ்தராகவும் உருவாக்கியவர்.

அவருடைய எண்ணங்களாகவே நான் செயற்படுகின்றேன்.

“புனிதமான சிந்தனைகள் இணைவதால் வெற்றிகள் கிட்டுகின்றன”— என்ற விளையாட்டுத்துறை மந்திரத்தை எனக்குப் போதித்த வழிகாட்டி அவர். அவர் வழியில் எம் பணி தொடரும்.

ஸ்ரான்லி விளையாட்டுக் கழக ஸ்தாபகரும் தலைவருமாகிய அவர் என்றும் என் நல்லாசானாகத் திகழ இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

— வி. கே. சண்முகலிங்கம்.
விளையாட்டுத்துறைப் பயிற்சியாளர்,
கனகரத்தினம் ம. ம. வி.

சீலம் மிக்க பெரியார்

இனிகின் மலரை எமக்களித்த ஊரெழுவில் அவதரித்த கே. வி. தனேஸ்வரன், கடந்த பத்து ஆண்டுகள் அச்சுவேலிப் பிரதேசத்தை தமது வாசஸ்தலமாக வரித்து, கனகரத்தினம் ம. ம. வி. சகல துறைகளிலும் சிறந்து விளங்க அரும்பணியாற்றியவர்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை தன் நெறிகளாகக் கொண்டவர்;

யாழ். மாவட்டத்தில் பிரபல்யமான சகல துறை அமைப்பாளர்;

இவரை தம் வழிகாட்டியாகக் கொண்ட பல்வேறு பொது அமைப்புக்கள், தங்களின் முக்கிய நிகழ்ச்சிகளுக்கு இவரையே பிரதம விருந்தினராக அழைத்து வருவது அவரது சீலத்துக்குச் சான்றாகும்.

அவரின் இளைப்பாற்று வாழ்வு சிறக்க இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

—கலாநிதி. சு. மோகனதாஸ்,
பீடாதிபதி, விவசாயத்துறை-
யாழ். பல்கலைக்கழகம்,
தலைவர், பழைய மாணவர் சங்கம்,
கனகரத்தினம் ம. ம. வி.

விளையாட்டுத்துறையில் முத்திரை பதித்த விற்பன்னர்

கல்விப் புலத்தில் சிறந்து விளங்கும் க. வை. தனேஸ்வரன் எண்ணற்ற கல்விமானின் இதயங்களில் நிறைந்தவர்.

காலக் கண்ணாடிகளான ஆசிரியப் பெருமக்களை பெருமையுடன் நினைவு கூரும்போது தனேஸ்வரன் தலைமகனாகப் போற்றப்படுவார் என்று கூறினால் அது வெறும் புகழுரையாகாது.

பல்துறை வல்லுநரான தனேஸ்வரன் விளையாட்டுத் துறையில் தனி முத்திரை பதித்த விற்பன்னர்; பழுத்த கலைஞர்; வாக்கு வசீகரம் மிக்கவர்; சிறந்த சொல்லேர் உழவர்.

கனகரத்தினம் ம. ம. வியில் உப அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறும் திரு. தனேஸ்வரன், கல்லூரியின் சேவைக்கு சுமார் ஒரு தசாப்தத்துக்கு மேற்பட்ட காலத்தை செலவிட்டவர்.

மாணவர் உள்ளங்களில் உவந்து நடமிடும் நம்பிக்கை நட்சத்திரம் அவர்.

“நவில்தொறும் நூல் நயம்” என்ற வள்ளுவன் வாக்குக்கு இணங்க வாழும் பண்புடையாளர்; இம்மண்ணின் நன்மை கருதி பணியாற்றும் செயல் வீரன்.

அவரது இளைப்பாற்று வாழ்வு சிறக்க எல்லாம் வல்ல ஆடற் திருமகன் கந்தப்பெருமான் நல்லருள் நல்குவாராக;

இ. சுந்தரலிங்கம்,
பிராந்திய கல்விப் பணிப்பாளர்;

ஆளுமைச் சிறப்பு மிக்கவர்

38 ஆண்டுகள் கல்விப் பணி புரிந்து இளைப்பாறும் உப அதிபர் திரு க. வை. தனேஸ்வரன் எனது இனிய நண்பர்; இந்தியாவிலும், பலாலி ஆசிரியர் கலாசாலையிலும் பயின்ற நாம் கல்லூரி நாட்களிலிருந்தே நட்புடன் பழகி வருகிறோம்.

அவரின் ஆளுமைச் சிறப்பு என்னைக் கவர்ந்தது. சிறந்த மேடைப் பேச்சாளரான இவர் பல்துறை ஈடுபாடு உடையவர்; கல்வியோடு தொடர்புடைய ஏனைய சகல துறைகளிலும் சமூக உயிர்களைத் தோற்றுவித்து நிர்வகித்த அனுபவம் அவரை முழு மனிதன் ஆக்கியது.

நீர்வேலி அத்தியார் இந்துவில் ஆசிரியராகவும் அநுராதபுர ஸஹிராவிலும், யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலும் உப அதிபராகவும் பணியாற்றிக் கல்விச் சமுதாயத்தில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்தவர்.

ஓய்வுநாட்களில் அவர் தம் பணி மேலோங்க இறைவனை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

நண்பன் ஏ. ஜி. ஜோசேப்,
இளைப்பாறிய ஆசிரியர்,
யா/வைத்தீஸ்வர வித்தியாலயம்,

மலர் ஏற்பாடு:
நண்பர்கள், பழைய மாணவர்கள்

வல்வையில் மர நடுகை

வல்வெட்டித்துறை, டிச. 3

வல்வெட்டித்துறைப் பகுதியில் மர நடுகை மும்முரமாக நடைபெற்று வருகிறது;

வீதி மருங்குகளிலும் பொது இடங்களிலும் மரங்கள் நடப்பட்டு வருகின்றன.

வல்வை, நெடியகாட்டு இளைஞர்களும், வல்வைக் கல்வி அபிவிருத்திச் சங்கத்தினரும் மற்றும் பலரும் மர நடுகையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

(ஒ-155)

26 ஆயிரம் பேர் சிகிச்சை

யாழ்ப்பாணம், டிச. 3

யாழ். போதனா வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவில் கடந்த நவம்பர் மாதத்தில் சுமார் 26 ஆயிரம் பேர் பலதரப்பட்ட நோய்களுக்கும் சிகிச்சை பெற்றுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன;

சிகிச்சை பெற்றவர்களில் கணிசமானோர் தற்போது அகதி முகாம்களில் தங்கியிருப்பவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் ஆயிரம்பேர் வரையானோர் கடந்த மாதம் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-17)

நொதேண்
கல்வி நிலையம்
சுண்டிக்குளி
கல்வியாண்டு - 93
O/L
10, 9, 8, 7, 6, 5ஆம்
ஆண்டுக்கான
வகுப்புகள்
ஆரம்பம்;
05 - 12 - 1992
பிற்பகல் 3 மணி
(23477)

கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்
(இ-3914)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
★ பொருளியல் ★
திரு. க. கலாகரன்
94 பிரிவு I 11 — 12
94 பிரிவு II 9 — 10 ஆரம்பமாகின்றது.
93 பிரிவு I 10 — 12
93 Day Classes பிரிவு I 8-00 — 9-30
93 Day Classes பிரிவு II 9-30 — 11-00
(இ-3821)

கலை, வர்த்தகக் கல்லூரி
C. C. A.
DAY CLASSES
புதிய பிரிவு III
எமது வழமையான ஆசிரியர் குழு!
ஆரம்பம்; 03 — 12 — 1992
புதிய அலகிலிருந்து ஆரம்பமாகும்
— நிர்வாகி.

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

கண்ணாடி, ஹோல் சேக் கேஸ், புத்தக ராக்கி, றோணியோ - இயந்திரம். மேசை லாச்சிகளுடன், வேப்பம் பலகையிலான உடுப்பு வைக்கும் அலுமாரி தொடர்பு: இல. 65, 185, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [5612]

விற்பனையாகிறது

G. A. Q கம்பராமாயணம் வாலி வதை படலம், மதிமானடி சரித்திரம், தமிழ் இலக்கணம், B. A. - நாச்சியார் திருமொழி, வெள்ளிப்பாதரசம் ஆகிய வகுப்புகளுக்குரிய புத்தகங்கள் விற்பனையாகின்றன. பூபாலசிங்கம் புத் சாலை, யாழ்ப்பாணம். [சி-8341]

ஆவலோடு எதிர்பார்த்திருந்த சித்திரம் [அலங்காரங்களும், விளக்கப்படங்களும்] தொகுதி 1 விற்பனையாகின்றது. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆக்கியோன் பசோ, வெளியீடு: நடுவுத்தருத்தி, விநியோகம்: ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 330, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (23469)

மணமக்கள் தேவை

ஆண் 34 வயது [12இல் செவ்வாய், இரசபாவம் 20] எக்கவுண்டனுக்கும், பெண், 40 வயது [4இல் செவ்வாய் இரசபாவம் 17]; கணித ஆசிரியைக்கும் மாற்றாகவோ தனியாகவோ செய்யப்படும். மதிவன ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். (23449)

இலவச திருமண சேவை

30 வயது, அவிட்டம், செவ்வாய் 12, சுவிஸில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. பெண்ணை அழைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளலாம்; நேரடித் தொடர்பு: ஞாயிறு காலையில் 9: விலா, யாழ்/நாச்சிமார் கோவிலடி. (23447)

கலை, வர்த்தக கல்லூரி

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

ஆண்டு 9, 10, 11 பிரிவுகள்

சனி, ஞாயிறு 1-00—6-00
செவ், வியாழ் 3 00 – 6-00

எமது ஆசிரியர் குழு:

விஞ்ஞானம் — திரு. இரா. செல்வவடிவேல்
கணிதம் — திரு. நிமலநாதன்
சமூகக்கல்வி — திரு. வேலா
தமிழ் — திரு. ஞானதிருக்கேதீசன்
ஆங்கிலம் — திரு. T சௌந்தர-பாண்டியன்,

ஆரம்பம்:
05-12-1992
1-00 மணி
[கி-3805]

கலண்டர்கள்

வியாபார ஸ்தாபனமா? விளம்பரம் பற்றிய யோசனையா? மூன்று விதமான அழகிய ஓவ்செட் கலண்டர்கள் உங்கள் விளம்பரத்திற்கென்றே உருவாக்கப்பட்டுள்ளது: இன்றே எம்மை நாடுங்கள்: ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [23355]

தவறிவிட்டது

சிவலிங்கம் பரமேஸ்வரி ஆகிய எனது அடையாள அட்டை [557481796 V] ஆஸ்பத்திரி பின் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஆஸ்பத்திரியின் விசாரணை பீடத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [5614]

இளசோதிநாதன் ஆகிய நான் சுன்னாகம் சந்தியூடாக உடுவில் வட்டவைச் செயலகத்திற்கு போகும் வழியில் தங்க மோதிரம் ஒன்று தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள், ஜெமினி ஸ்ரோர்ஸ், சுன்னாகம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும்; தகுந்த சன்மானம் வழங்கப்படும். [5441]

சங்கீதம் வினா - விடை

சங்கீதம் வினா - விடை (ஆண்டு 10-11) விற்பனையாகிறது; ஆக்கம் செல்வி ''அநேகா'' (O/L) பரீட்சையில் உச்சப் புள்ளிபெற உதவும்வழிகாட்டி. முந்நூற்றுக்கு மேற்பட்ட வினாக்களுக்கு விரிவான விடைகள், இராக லட்சணங்கள், இசைக்குறிப்புகள் கொண்டது. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஸ்ரீசுப்பிரமணியம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (23444)

கண்டெடுக்கப்பட்டுள்ளது

தங்கச் சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது; தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும். ஆர். அன்ரன் (குட்டி), 164, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (23476)

போலியோ தடுப்பு மருந்து

தென்மராட்சிப் பகுதி பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு (ஆண்டு 1) மாணவர்களுக்கு போலியோ தடுப்பு மருந்து வழங்கப்பட்டு வருகிறது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஓ-117)

NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

கல்வியாண்டு - 1993

ஆண்டு 9, 10, O/L

புதிய பிரிவுகள்;

ஆரம்பம்: 05 - 12 - 1992

சனி பி. ப. 3 மணி

எமது ஆசிரியர் குழு:

விஞ்ஞானம் — திரு. கொவின்ஸ்
திரு. தங்கச்செல்வன்
கணிதம் — திரு. சதீஸ்
தமிழ் — திரு. தங்கராஜா
சமூகக்கல்வி — திரு. சன்
வர்த்தகம் — திரு. ஜீவா
ஆங்கிலம் — திரு. தெய்வதவபாலன்

குறிப்பு:-
இவ்வாண்டு இறுதிவரை வகுப்புக்கள் யாவும் இலவசமாக நடத்தப்படும்.

(கி-3838)

அறிவித்தல்

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தின்

விசேட பொதுக் கூட்டம்

அன்புடையீர்!

எதிர்வரும் 1992-12-18ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு இலக்கம் 21, மேல் மாடி, நவீன சந்தையில் அமைந்துள்ள யாழ். வர்த்தகர் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் கொடுக்குமாறு அன்புடன் அழைக்கிறேன்.

நிகழ்ச்சி:

★ முன்னைநாள் தலைவரை நீக்கியதற்கான காரணத்தைத் தெரியப்படுத்தல்.

நன்றி,

க. மு. பத்மநாதன்,
உப செயலாளர்.

[5615]

O/L DEC. 1992

வருடாவருடம் சிறந்த பெறுபேறுகளையே பெற்றுத் தரும் எமது வழமையான ஆசிரியர் குழு

★ கணிதம்
★ தமிழ்
★ ஆங்கிலம்
★ வர்த்தகம்
★ சித்திரம்
★ சங்கீதம்
★ விஞ்ஞானம்
★ சமூகக்கல்வி
★ சமயம்
★ விவசாயம்
★ மனைப்பொருளியல்
★ நடனம்

ஆகிய அனைத்துப் பாடங்களுக்குமான புதிய வகுப்புகளுடன்

5ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம் ஆண்டு வகுப்புகளும்

ஆரம்பம்: 05 - 12 - 1992

BOND INSTITUTES

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[சி-3935]

இளங்கலைஞர் மன்ற கலாமண்டப

திறப்பு விழாவும்

''ராக பாவம்''

நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்: மன்ற கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்: 06 - 02 - 1993 — 08 - 02 - 1993

நுழைவுச்சீட்டு:
நாள் ஒன்றுக்கு:- 500/-, 250/-

பொன். சுந்தரலிங்கம்,
தலைவர்;

(கி-3920)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 30 — 06 — 1928

மறைவு: 15 — 12 — 1991

அமரர் சிவஞானம் மயில்வாகனம்

(மக்கள்வங்கி முன்னாள் பிரதம காசாளர்)

எங்கள் குடும்பத்தின் கலங்கரை விளக்காய், சமூகத் தொண்டனாய், சுற்றத்தாருக்கு கொழுகொம்பாய் வாழ்ந்து பணி செய்த பெருமை ஆண்டு ஒன்று சென்றாலும், எம் மனதை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

37, அம்மாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

(23474)

நிவாரணப் பொருள் விநியோகம்: அளவையில் மோசடி கண்டுபிடிப்பு

செயலக நிறுவை, அளவை பிரிவினர் உஷார்

யாழ்ப்பாணம், டிச 3

அகதிகளுக்கு நிவாரணம் வழங்கும்போது ஒரு சில ப. நோ. சங்கக் கிளைகளிலும், உத்தரவுபெற்ற கடைகளிலும் அளவையில் மோசடிகள் இடம்பெற்று வருவதாகப் பரவலாகப் புகார் கூறப்படுகிறது.

இவ்வாறான மோசடிகளை கண்டுபிடிக்க யாழ். செயலக நிறுவை அளவைப் பிரிவு பரிசோதகர்கள் இப்போது திடீர் சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொருள்களின் நிறையில் மோசடி இடம்பெற்றுவருவதாக மக்களிடம் இருந்து தொடர்ந்து புகார்கள் கிடைத்துள்ளன என்றும்—

அதை அடுத்து இடம்பெற்ற திடீர் சோதனை ஒன்றின் போது பண்டத்தரிப்பைச் சேர்ந்த பாவனையாளர் ஒருவருக்கு 200 கிராம் மாவும், 30 கிராம் சீனியும் ப. நோ. கூ. சங்கக் கிளை ஒன்றில் குறைவாக வழங்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது என்றும்— செயலக நிறுவை அளவுகள் பிரிவுப் பரிசோதகர் திரு. கா. நாகலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள மற்றும் சில ப. நோ. கூ. சங்கக் கிளைகளிலும் இவ்வாறான திடீர் சோதனைகள் இடம்பெறவிருப்பதாகவும்—

மக்கள் விழிப்புடன் இருந்து இப்படியான அளவை மோசடிகளை யாழ். செயலக நிறுவை, அளவுகள் பிரிவிடம் அறிவிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

(ஒ-3)

ஜே. வி. பி. முக்கியஸ்தர் கைது

கொழும்பு, டிச. 3

ஜே. வி. பி. இயக்கத்தின் கல்விப் பிரிவுக்குப் பொறுப்பான தலைவர் எனக் கூறப்படும் ஒருவர் திக்வெல்லையில் பஸ் ஒன்றில் சென்றுகொண்டிருக்கும்போது கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாத்தறையா என்ற இந்த நபர் பஸ்ஸில் சென்றபோது அதில் பிரயாணம் செய்த ஏனைய பிரயாணிகள் அவரைப் பிடித்துப் பொலீஸில் ஒப்படைத்தனராம்.

கடந்த திங்கட்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றது.

(த)

தமிழர்களுக்கு விடுதி வசதி: 10 சிங்களவர்கள் கைது

கொழும்பு, டிச. 3

கொழும்பில் தமிழர்களுக்கு விடுதி வசதி ஏற்படுத்திக் கொடுக்கும் சிங்களவர்களும் பொலீஸாரால் கைது செய்யப்படுகின்றனர்.

பொலீஸாருக்கு அறிவிக்காமல் விடுதி வசதி வழங்கிய பத்துச் சிங்கள வர்த்தகர்கள் அண்மையில் வத்தளையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில்—

இவர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு தமிழர்களுக்கு இடவசதி வழங்கி இருந்தனர் என்று சொல்லப்படுகிறது.

நோர்வே வர்த்தகக் குழுவில் வந்த தமிழரே கைதானார்!

கொழும்பு, டிச. 3

''எக்ஸ்போ 92'' கண்காட்சிக்கு வந்த நோர்வே வர்த்தகக் குழுவைச் சேர்ந்த தமிழரே கைது செய்யப்பட்டுள்ளார். நோர்வே பிரசையான இவர் கைதானது குறித்து இங்குள்ள தூதரகத்திற்கு அறிவிக்கப்படவில்லை.

சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

''எக்ஸ்போ 92'' வர்த்தக கண்காட்சி நடந்த பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடியதாக அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட நோர்வே பிரசையான மகேந்திரன் கனகரத்தினமும், அவரது உறவினரான இளைப்பாறிய அரச ஊழியரான நல்லையாவும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர் என்பதும் —

இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றை அடுத்து அவர்கள் இருவரும் கொழும்பு பிரதம நீதிவான் சரத் அம்பேபிட்டியவினால் தலா ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையில் செல்ல கடந்த 23 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டனர் என்பதும் — குறிப்பிடத்தக்கவை.

கொழும்பு வார்ட் பிளேஸில் உள்ள றோயல் நோர்வேத் தூதரகப் பதில் தலைவர் டேர்ஜி பாஸ் டான் கைச்சாத்திட்ட கடிதம் ஒன்றையும் சட்டத்தரணி நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

இதனை ஏற்றே சந்தேகநபர்கள் இருவரையும் நீதிவான் பிணையில் செல்ல அனுமதித்து நவம்பர் 30 ஆம் திகதி மீண்டும் ஆஜராகுமாறு உத்தரவிட்டிருந்தார்.

(ஒ)

லாண்ட் மாஸ்ரர் தேவை

71/72/சிறி 5000 இலக்கத்துக்கு பிந்திய இலக்கம் உடைய நல்ல பாவிப்பில் உள்ள ''லாண்ட் மாஸ்ரர்'' தேவை. சகல ஆவணங்களுடன் 24-12-1992இற்கு முன்னர் காலை 9 மணிக்கும் பிற்பகல் 2-00 மணிக்கும் இடையில் நேரில் தொடர்பு கொள்ளவும். விலை விபரம் நேரில் கதைத்து முடிவு செய்யலாம்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
(T. R. R. O)
106, நாலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(இ-3938)

பேச்சு, கட்டுரை போட்டி

கொழும்பு, டிச. 3

இந்து சமயத்திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள பேச்சு, கட்டுரை, பண்ணிசை ஆகிய துறைகளுக்கான தேசிய மட்டப் போட்டிகள் இம்மாதம் 26 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு— கொம்பனித்தெருவிலுள்ள— காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 9 ஆவது மாடியில் — அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

(ஒ-எ)

இலங்கைக்கு கடனுதவி

மணிலா, டிச. 3

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் பெருந்தொகைப் பணத்தைக் கடனாக வழங்குவது என்று மணிலாவைத் தலைமையகமாகக் கொண்டுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

சுகாதார மற்றும் மக்கள் நலன் பேண பாகிஸ்தானுக்கு 6 கோடி அமெரிக்க டொலர்களை இவ் வங்கி வழங்கும் என்றும்—

மீன் பிடித் தொழில் வளர்ச்சிக்காக இலங்கைக்கு 2கோடி 60 லட்சம் டொலர் கடனாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

முத்திரையிடும் வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச. 3

நிறுவை அளவை, உபகரணங்களுக்கு முத்திரையிடும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதன்படி —

வல்வெட்டித்துறை நகர சபைக் காரியாலயத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையும், மானிப்பாய் பட்டினசபைக் காரியாலயத்தில் 14ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையும் —

மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க காரியாலயத்தில் 18 ஆம் திகதி காலை 8. 30 மணி தொடக்கம் நண்பகல் 1 மணி வரை நிறுவை, அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் வேலைகள் நடைபெறும். (ஒ-168)

கட்டாக்காலிகள் கழுத்தில் 'வாசகங்கள்'!

சுழிபுரம், டிச. 3

மாதகல் பகுதியில் திரியும் கட்டாக்காலி மாடுகளின் கழுத்தில் ''வாசகங்கள்'' எழுதிய மட்டைகள் காணப்படுகின்றன.

கடந்த வாரம் சுழிபுரம் காட்டுவளவு பகுதியில் மேய்ந்து கொண்டிருந்த பல மாடுகளிலும் 'வாசகங்கள்' தொங்கின.

மாதகல் பகுதியிலுள்ள ஸ்ரீலங்கா இராணுவ காவலரண்கள் பக்கமாக இருந்து வரும் கால்நடைகளின் கழுத்திலேயே வாசக மட்டைகள் காணப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ([illegible])

வடமராட்சிப் பகுதியில் வேகமாகப் பரவும் நோய்கள்

வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் மலேரியா, வயிற்றோட்டம், செருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன.

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நுளம்பு மற்றும் இலையான் போன்றவற்றை ஒழிக்க தெளி மருந்துகள் இன்மையே நோய்கள் பரவக் காரணம் எனக் கூறப்படுகிறது. (ஒ-155)

சமூகத்திற்கு பயன்படும் வகையில் மாணவர்கள் உருவாக வேண்டும்

பரிசளிப்பு விழாவில் அரச அதிபர் உரை

யாழ்ப்பாணம், டிச 3

நெருக்கடியான ஒரு காலத்தை எதிர்நோக்கியுள்ள எமது சமூகத்திற்கு பயன்படத் தக்கதாக மாணவர்கள் தம்மை உருவாக்கிக்கொள்வதே இன்றைய தேவையாகும். கல்வி வாழ்க்கைக்கு உதவும். ஆனால் மனித நேயமற்ற கல்வி நிலைக்காது.

அண்மையில் நடைபெற்ற யாழ். மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் இவ்வாறு சொன்னார்.

கல்லூரி அதிபர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் அவர் மேலும் கூறியதாவது:

விஞ்ஞான தொழில்நுட்ப ஆற்றலுக்கான கல்வி முறையின் அவசியம் தற்போது உணரப்பட்டிருப்பதால், இத்துறைகளில் போதிய அறிவைப் பெற மாணவர்கள் தாய்மொழிக் கல்வியுடன் ஆங்கிலத்திலும் சிறந்த ஆற்றலைப் பெறவேண்டும் என்றார்.

கல்லூரி அதிபர் தனது தலைமை உரையில் கூறியதாவது:

இழப்புக்கள், மனக்குழப்பங்களின் மத்தியிலும் புதிய தேசிய மறுமலர்ச்சிப் பிரவாகத்தில் மாணவர்கள் தம்மை ஈடுபடுத்திக்கொண்டுள்ளனர். வெறும் புத்தகப் பூச்சிகளாக மட்டும் மாணவர்கள் இருப்பார்களாயின் சமூக உணர்வற்ற குற்றவாளிகளாக அவர்கள் மாறிவிடுவார்கள் என்பதை கருத்தில் கொண்டு—

கல்வியுடன் சமூக உயர்வுக்கான பணிகளிலும் அவர்களை ஈடுபடுத்துவதிலும் நாம் முனைப்புடன் உள்ளோம்— என்றார்.

யாழ். பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சு. வேலாயுதம், திரு. என். ராஜதேவன், செல்வன் பொ. வாகீசன் உட்பட பலர் நிகழ்ச்சியில் பேசினர். மாணவர்களுக்கான பரிசுகளை திருமதி பே. மாணிக்கவாசகர் வழங்கினார். இறுதியில் மாணவர் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(த-111)

மக்னெற் கல்வி ஸ்தாபனம்
கல்வியங்காடு

கல்வியாண்டு - 1993
93, O/L ஆண்டு 5, 6, 7, 8, 9, 10
வகுப்புகள் ஆரம்பமாகின்றன
5-12-92 [காலை 8 மணி]

யாழ்நகரின் முன்னணி ஆசிரியர் குழு
இணைந்த சேவை

கணிதம் — திரு. வாமதேவன்
விஞ்ஞானம் — திரு. அரசகுலசூரியர்
சமூகக்கல்வி — திரு. கோபி, தில்லைநாதன்
தமிழ் — திரு. துரைராஜா
ஆங்கிலம் — திரு. சத்தியபாலன் (பாபு)
வர்த்தகம் — திரு. ராஜன்

அனுமதிகளை முன்கூட்டியே பெறவும்.

(இ - 8941)

WANTED TEACHER
ST. PATRICK'S COLLEGE, JAFFNA.

FULL - TIME TEACHER FOR

English Language: Years 9 to 11
Science: Years 10 to 11
Physics: Advanced Level Classes

Apply before 10 - 12 - 1992 Please quote
Ref. No. 31292

- RECTOR.

(C-3939)

றோட்டரிப் போட்டி பரிசளிப்பு இன்று

யாழ்ப்பாணம், டிச. 3

யாழ். றோட்டரிக் கழகம் உதயன் வெளியீட்டகத்தின் ஆதரவுடன் நடத்திய போலியோ தடுப்பு சுவரொட்டிகள் மற்றும் சுலோக போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு வைபவம் இன்று மாலை 4-30மணிக்கு சுபாஸ் ஹோட்டலில் நடைபெறும்.

போட்டியில் பங்கு பெற்றவர்கள் அனைவரும் இந்த வைபவத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இடம்பெயர்ந்தமை காரணமாக அழைப்புக் கிடைக்காதவர்களும் வைபவத்துக்கு வரலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

இரவில் தேங்காய் திருட்டு

ஏழாலை, டிச. 3

ஏழாலை மேற்குப் பகுதியில் பல இடங்களிலும் இரவில் தென்னை மரங்களில் திருடர்கள் ஏறி இளம் தேங்காய்களைப் பறித்துச் செல்கின்றனர் என்ற பரவலாகப் புகார் கூறப்படுகிறது. (ஓ-46)

மட்டக்களப்பில் வெள்ள அபாயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையின் காரணமாக வெள்ள அபாயம் தோன்றியுள்ளது

மட்டக்களப்பு முகத்துவார வாவியில் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது. மட்டக்களப்பு - கொழும்பு பிரதான பாதையில் மன்னம்பிட்டியில் 3 அடிக்கு நீர் நிரம்பியுள்ளதால், சிறுவாகனங்கள் செல்ல முடியாதுள்ளது (த)

சுப்பர் சொனிக் குண்டு வீச்சு

தென்மராட்சி, டிச. 3

கடந்த வியாழக்கிழமை பகல் 1-00 மணிக்கு கிளாலி, எழுதுமட்டுவாள் பகுதியை வட்டமிட்ட சுப்பர் சொனிக் விமானங்கள் எழுதுமட்டுவாள் ஐந்தாம் துண்டு என்னும் இடத்தில் குண்டுகளை வீசியது.

குண்டுகள் தென்னந்தோட்டம் ஒன்றில் வீழ்ந்து வெடித்ததில் பல தென்னை மரங்கள் முறிந்தன. (ஒ-117)

புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்

O/L - 93
ஆண்டு 10, 9

புதிய பிரிவுகள்

ஆரம்பம்:
05 - 12 - 92
(சனி 3-00மணி)

விஞ்ஞானம் — தயாநிதி
கணிதம் — கதிர்
ச. கல்வி — கியூபேட்
தமிழ் — பிரதீபன்
வர்த்தகம் — ஸ்ரீ
ஆங்கிலம் — சண்

(இ-3813)

தென்னைக்கு உரமிடுமாறு ஆலோசனை

யாழ்ப்பாணம், டிச. 03

தென்னை ஒவ்வொரு மாதமும் பூத்துக் காய்த்துப்பயன் தரும். வருடம் முழுவதும் அது பலவித பயன்களையும் தருவதால் தரையில் உள்ள ஊட்டச்சத்து வெகுவிரைவில் இழக்கப்படுகின்றது. இந்த இழப்பை ஈடுசெய்வதன் மூலம் தொடர்ச்சியான நல்ல பயனைப்பெற முடியும்.

உரமிடுவதன் மூலம் தரையின் ஊட்டச்சத்தை அதிகரிக்கலாம். உரமிடுவதற்கு தமிழீழப் பிரதேசத்தில் மாரிகாலம் ஏற்ற காலமாகும். எனவே தெங்குச் செய்கையாளர்களும், வீட்டுத் தோட்டங்களில் தென்னை பயிரிட்டுள்ளவர்களும் இதில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

ஐந்து வருடத்திற்கு உட்பட்ட இளம் தென்னம் கன்று ஒன்றுக்கு 2 கிலோ வை. பீ. எம். (இளம் மரக்கலவை) உரமும், ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட காய்க்கும் தென்னை மரங்களுக்கு 2½ கிலோ ஏ. பீ. எம். (முதிர் மரக்கலவை) உரமும் இடுதல் அவசியமாகும்.

ஆக வயதில் குறைந்த இளம் தென்னங்கன்றுகளுக்கு வயதுக்கேற்ற வித்தியாசமான அளவுகளில் உரமிடுதல் வேண்டும்.

வை. பீ. எம். மற்றும் ஏ. பீ. எம். கலவை உரங்களை நேரடியாக எடுக்க முடியாதவிடத்து, கமநல சேவை நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் உரமிடுதல் பீடைகள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக்கு தென்னை பயிர்செய்கை சபை யாழ் மாவட்ட தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஜே. சத்தியேந்திரனுடன் தொடர்புகொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றிய பகுதியினர் தெங்கு பயிர்செய்கையாளரைக் கேட்டுள்ளனர். (இ)

★ அந்தியேட்டிக்குத் தேவையான (12'' x 10'' Recopy) புகைப்படங்கள்
★ நினைவஞ்சலி கல்வெட்டு புத்தக அட்டை லேபல்களுக்கு வேண்டிய Line-Half Tone, Colour Blocks
★ Photo Polymer (பிளாஸ்ரிக் Blocks)
★ றபர் சீல்
★ ஓவிய வேலைகள்
★ விளம்பர ஸ்ரிக்கேஸ்

தரமாக குறைந்த விலையில் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ள'

கொழும்பு ஸ்ரூடியோ
55, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3926)

விண்ணக வாழ்வின் 31ஆம் நாள்

மண் சேர்ப்பு:
15
—
04
—
1954



விண் ஏற்பு:
03
—
11
—
1992

ஸ்ரீசக்கரமென்தாஸ்
(இலங்கேந்திரன்)

இல்லறத்தில் இலங்கு இந்திரனே - எம்
உள்ளமதைக் கவர்ந்திட்ட சுந்தரனே
மாதமொன்று ஓடினாலும் - மங்காது உன்நினைவு
வெதும்பியே மாய்கின்றோம் - வெந்தணலில்
வீழ்கின்றோம்
பார்போற்றும் மைந்தனாய் - பண்பான
நற்தலைவனாய்
அன்புக்கு ஓர் அப்பாவாய் எல்லவருக்கும் நல்லவனாய்
வாழ்ந்திட்ட நாட்களை வாஞ்சையுடன்
நோக்குகின்றோம்
சேர்ந்திட இறைவனடி சிந்தையுடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்;
அன்பு அம்மா, அருமை மனைவி,
பாசக்குழந்தைகள், அப்பப்பா,
அம்மம்மா, உற்றார், உறவினர்.

சென். யூட்ஸ் அவனியூ,
அரியாலை.

(23473)

ஆசிரியர் தேவை

6, 7, 8, 9ஆம் ஆண்டுகளுக்கான

● கணிதம்
● விஞ்ஞானம்
● தமிழ்
● ஆங்கிலம்
● சமூகக்கல்வியும் வரலாறும்

ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கு, கற்பித்தலில் ஆர்வமும் அனுபவமும் உள்ள ஆசிரியர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் பிற்பகல் 3 00 — 5-00 மணி வரை நேரில் வரவும்.

BOND INSTITUTES
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 3933)

I. A. B.
சர்வதேச கணக்குப் பதிவாளர் கழகம்
(லண்டன்)

June - 93

★ FOUNDATION
★ INTERMEDIATE
★ FINAL

ஆரம்பம்: 05 - 12 - 1992

★ கடந்த கால பரீட்சைகளில் மிகச் சிறந்த பெறுபேறுகள்
★ குறைந்த கட்டணம்

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3rd CROSS STREET, JAFFNA.

(இ-3848)

University of Jaffna.

Tender for the Supply of Furniture

Sealed tenders are invited for the following:

1.	Straight Back Chair	— 13 nos
2.	Arm Chair	— 07 nos
3.	Table	— 13 nos
4.	Executive Table	— 01 no
5.	Timber Bench	— 10 nos
6.	Bed	— 08 nos
7.	Key Board 2' x 3'	— 01 no
8.	Notice Board	— 02 nos
9.	Book Press	— 02 nos
10.	Periodical Display Shelves	— 05 nos
11.	Ola Manuscript Cabinets	— 02 nos
12.	Catologue Cabinets	— 02 nos

Drawings and relevant details could be obtained from the Bursar, University of Jaffna. between 1992 - 12 - 07 to 1992 - 12 - 10 during office hours on payment of Rs. 200/- as non - refundable deposit and Rs. 5,000/- as refundable deposit.

Sealed tenders should be forwarded to the Bursar, University of Jaffna on or before 10-00 a. m. on 1992 - 12 - 15, indicating "Tender for Furniture" on the left hand corner of the envelope. The Tender will be opened on the same day at 10-30 a. m.

- REGISTRAR.

(C-3932)

உதயன்

பனைகள் தலை நிமிரட்டும்!

பனை மர நடுகைக்கு முதலிடம் கொடுக்குமாறு தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் பொதுமக்களைக் கேட்டுள்ளது. வீதிகளில் பனம் விதைகளை நடும்போது எவ்வாறு நடவேண்டும் என்பது குறித்தும் கழகம் தக்கபடி அறிவுறுத்தி உள்ளது.

வடமாகாணம் பொதுவாகவே வரண்ட பிரதேசமாகும். இங்கு பருவ மழை போதியளவு பெய்வதற்கு மரங்கள் நிறையத் தேவை. அடர்ந்த காடுகள் அழிக்கப்படுவதால் கிராமங்களிலும் நகரங்களிலும் வீடுகள், வீதிகள், வெளிகள் எங்கும் பெரும் எண்ணிக்கையில் மரம் நடவேண்டிய அவசரமும், அவசியமும் உருவாகியுள்ளன.

இத்தகைய ஒரு நெருக்கடியான வேளையில் மரநடுகையைத் தீவிரமாக்க வேண்டிய தேவை உருவாகியுள்ளது. அதனைப் போர்க்கால அவசரத் திட்டமாக நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியமும் தோன்றி உள்ளது.

எங்கள் தந்தையரும், பேரன்மாரும் வைத்து வளர்த்துப் பேணிக் காத்த மரங்களை இப்போது எமது தேவைக்குப் பயன்படுத்துகிறோம். அவ்வாறே எமது மகன்மாரும் அவர்கள் சந்ததியும் மரங்களின் உபயோகத்தைப் பெறுவதற்கு நாம் மரம் நடவேண்டியது எமது கடமையாகிறது. இதனை ஒவ்வொரு மனிதனும் மனதார உணர வேண்டும்.

வரண்ட பிரதேசங்களில் வாழும் தமிழர்கள் இதில் அதிக அக்கறை காட்டுவது இன்றியமையாதது. காடுகள் அழிந்து வரும் இவ்வேளையில், விறகுக்காக மரங்கள் தறிக்கப்படும் இக்காலத்தில் தமிழர்கள் மரம் நடுகையை தமது நாளாந்த வாழ்க்கையின் ஓர் அம்சமாக்கிக் கொள்ள வேண்டும். அந்தந்தப் பருவகாலத்துக்கு ஏற்ற மர வகைகளை வீடுகள், வளவுகள், வெளிகள், வீதிகளில் நாளாந்தம் நட வேண்டும்.

தமிழர்கள் தமது மண்ணைப் பாலைவனமாகுவதற்கு அனுமதித்தால் அவர்கள் மண்ணை மீட்பதற்கும், தாயகத்தைப் பிரிக்காமல் தடுப்பதற்கும் நடத்தும் போராட்டம் அர்த்தமற்றதாகிவிடும். எமது அடுத்த சந்ததியினர் வாழ்வதற்கு உகந்ததாக இல்லாது மாறக்கூடிய மண்ணுக்காகப் போராடி என்ன பயன்? எல்லாம் மக்களிடமே தங்கி உள்ளது. எதிர்காலச் சந்ததியை வாழ வைக்கத் தாம் மரம் நடுவது அவசியம் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தமட்டில் பனை இலகுவில் வளரக்கூடியது. தண்ணீரும் பராமரிப்பும் அதிகம் தேவைப்படாது எண்ணிலடங்காப் பயன்களைத் தரவல்லது நீண்ட காலம் நின்று பயன் ஈந்து எமது உணவுத் தேவையை பல வகைகளாலும் நிறைவேற்றக் கூடியது. குடாநாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கக்கூடியது.

எனவே பனையை எமது தேசியப் பயிராகப் பிரகடனப்படுத்தி அதனை அதிக அளவில் உற்பத்தி செய்வோமாக. கற்பக தருவாக விளங்கும் பனை எமக்கு இயற்கை தந்த அருஞ்செல்வம் என்பதனை உய்த்துணரவேண்டும். எங்கள் மண்ணில் பனைகள் தலைநிமிர்ந்து ஓங்கி நிறைந்தால் நாமும் தலை நிமிர்ந்து நிற்க முடியும்.

பலாலி தாக்குதல் மற்றும் ஒருவர் வீரமரணம்

யாழ்ப்பாணம், டிச. 3

கடந்த மாதம் 24 ஆம் திகதி பலாலி கிழக்கில் காவலரண்கள் மீது நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதல் சம்பவத்தில் விழுப்புண் அடைந்திருந்த விடுதலைப் புலிகள் இயக்கப் பெண் போராளி ஒருவர் நேற்று அதிகாலை வீரமரணமடைந்தார்.

இரண்டாம் லெப்டினன்ட் குலமகள் அல்லது ஐமீலா [முருகையா மாலா — அளவெட்டி] என்ற போராளியே வீரமரணமடைந்தவராவார்.

சித்த மருத்துவ பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், டிச. 3

யாழ். பல்கலைக்கழகத்தின் 1991 ஆம் ஆண்டுக்கான சித்த மருத்துவ சத்திர சிகிச்சை பட்டதாரிகள் இறுதிப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சையில் மொத்தம் ஐந்து பேர் சித்தியடைந்துள்ளனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு

செல்வி பி. பத்மநாதன், பி. சுரேஷன், செல்வி வி. சச்சிதானந்தம், என். ஸ்ரீசுப்பிரமணியம், செல்வி ஏ. சுமதி. (இ-5)

நிவாரணத்துக்கு அரிசி, சீனி கூடுதலாக வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச. 3

நவம்பர் மாதத்தின் கடைசி இரண்டு வாரங்களுக்கும் வழங்கப்பட இருக்கும் இலவச உலர் உணவுப் பொருள்களின் அளவுகளில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டின் பிரகாரம் முன்னரை விடக் கூடுதல் அரிசியும், கூடுதல் சீனியும் வழங்கப்பட உள்ளன.

புதிய அளவுக்கு ஏற்ப தேவையான பொருள்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும், இரு வாரங்களுக்கும் உரிய நிவாரணப் பொருள்களை ஏழு நாட்களுக்குள் விநியோகிக்க வேண்டும் என்றும் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

நிவாரணப் பொருள் விநியோகம் குடும்ப அங்கத்தவர் ரீதியில் பின்வருமாறு அமையும்:-

பொருள்	1 அங்.	2 அங்.	3 அங்.	4 அங்.	5 அங்.
அரிசி (வெ. பச்சை)	2 கிலோ	4 கிலோ	5 கிலோ	6 கிலோ	7 கிலோ
மாவு	1¾ கிலோ	2 கிலோ	2½ கிலோ	3 கிலோ	5 கிலோ
சீனி	½ கிலோ	1½ கிலோ	2 கிலோ	2¼ கிலோ	3 கிலோ
மைசூர் பருப்பு	¼ கிலோ	250 கிராம்	600 கிராம்	800 கிராம்	800 கிராம்
தேயிலை	—	50 கிராம்	50 கிராம்	50 கிராம்	50 கிராம்

அகதி முகாம்கள் குறித்த அறிக்கை கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், டிச. 3

யாழ். மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகள் குறித்து விவரமான அறிக்கையை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் சகல அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் கோரி உள்ளது.

அகதி முகாம்களில் நிலவும் சீர்கேடுகள், அவற்றை தீர்க்கத் தேவையான ஆலோசனைகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு ஆகிய விவரங்கள் கொண்ட அறிக்கையை இம்மாதம் 5 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மக்கள் வங்கி அடகு நகை கொழும்பில் மீட்க வசதி

கொழும்பு, டிச. 3

வடபகுதியைச் சேர்ந்த மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாது இருக்கும் நகைகளை இனிமேல் கொழும்பில் மீட்டுக்கொள்ளலாம். இதற்கென மருதானையில் விசேட நகைமீட்புப் பிரிவு ஒன்று திறக்கப்பட்டிருக்கிறது.

இப்படி கொழும்பில் மக்கள் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

மன்னார், முருங்கன், வவுனியா, யாழ்ப்பாணம், கன்னாகம், சங்கானை, புங்குடுதீவு, காங்கேசன்துறை, பளை, சாவகச்சேரி, மாங்குளம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளை இந்தப் பிரிவில் மீட்டுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

மருதானை, டீன்ஸ் வீதியில் உள்ள 220ஆம் இலக்கத்தில் இருக்கும் 'கல்பனா' கட்டடத்தில் புதிய நகை மீட்புப் பிரிவு திறக்கப்பட்டுள்ளது. [இ-5]

யாழ். மாவட்ட

பிரதேச செயலகங்களுக்கு தலா 20 லட்சம் ரூபா

யாழ் மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலகங்களுக்கும் தலா 20 லட்சம் ரூபா நேரடியாக ஜனவரி முதல் கிடைக்கவிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் 14 பிரதேச செயலகங்களுக்கும் சம்பளம் மற்றும் அலுவலக செலவினங்களுக்கு மட்டும் இதுவரை மாகாண சபை நிதி வழங்கி வந்தது.

எதிர்வரும் ஜனவரி முதல் அந்தப் பிரதேச அபிவிருத்தி உட்பட மற்றும் செலவினங்களுக்காக 20 லட்சம் ரூபா வருடம் வழங்கப்படவிருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாண சபை நேரடியாக இந்த நிதியை வழங்கும். [இ-3]

பருத்தித்துறையில் செஞ்சிலுவை அலுவலகம்

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் மினி அலுவலகம் ஒன்று பருத்தித்துறை துறைமுகக் களஞ்சியத்துக்கு அருகில் திறந்து வைக்கப்பட உள்ளது.

கப்பலில் இருந்து பொருள்களை இறக்கி அனுப்பும் வேலைகளை கவனிப்பதற்கு வசதியாக இந்த அலுவலகம் திறக்கப்படுவதாக [illegible]க்கப்பட்டது. [இ-17]

நாளை

தென்மராட்சி, டிச. 3

மீசாலை றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆரம்ப பிரிவு மாணவர்களின் பொருட்காட்சியும் கலைவிழாவும் பரிசளிப்பும் நாளை [illegible] மண்டபத்தில் நடைபெறும்.

பழைய வட்டக்கச்சியில் சோழர்கால அம்மன் சிலை

கிளிநொச்சி, டிச. 3

கிளிநொச்சி, பழைய வட்டக்கச்சிப் பகுதியில் சோழர் காலத்து அம்மன் விக்கிரகம் ஒன்று அணிகலன்களுடன் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பழைய வட்டக்கச்சிப் (ஆதி வட்டக்கச்சிப்) பகுதியில் உள்ள விநாயகர் ஆலயத்தைப் புனரமைத்துக் கட்டுவதற்காக அத்திவாரம் வெட்டியபோதே ஓர் அடி உயரமான (30செ. மீ) வெண்கலத்திலான அம்மன் விக்கிரகம் கண்டெடுக்கப்பட்டது.

நீள்சதுர வடிவமானதும், வட்டவடிவமானதுமான ஒவ்வொரு சோடி வெண்டயங்களும், கோழிமுட்டைப் பருமன் உள்ள சலங்கை ஒன்றும் அதே இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவை இப்போது விநாயகர் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. எஸ். கிருஷ்ணராசா வந்து பார்வையிட்டார்.

குறிப்பிட்ட அம்மன் விக்கிரகம் சோழர் காலத்தில் பதவியா, பொலநறுவை, அநுராதபுரம் போன்ற இடங்களில் காணப்பட்ட வெண்கல அம்மன் விக்கிரகங்களை ஒத்திருக்கிறது.

அம்மன் விக்கிரகம் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் மேடானபரந்த நிலப்பரப்பும், அதன் கிழக்குப் பக்கத்தில் குளமும், பாரிய விருட்சங்களும் காணப்படுகின்றன. மேடான பகுதியில் உள்ள செங்கற் துண்டுகளை ஆய்வு செய்த போதே அவற்றில் சிறியனவும், பெரியனவுமான உருவங்கள் காணப்பட்டதாக தொல்லியல் ஆய்வு ஆர்வலரான திரு. வி. கனகராசா உதயனுக்குத் தெரிவித்தார். பெரிய செங்கற்களில் அம்பு மார்க் குறிகளும் காணப்பட்டனவாம். உருத்திரபுரம் சிவாலயத்தில் உள்ள செங்கற்களிலும் இந்த அடையாளங்கள் காணப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ)

வீடமைப்பு மானியம்

கொழும்புத்துறை, டிச. 3

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சிறு வீடமைப்பு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், யாழ். மாநகர சபையால் தெரிவு செய்யப்பட்ட 8 பேருக்கு முதற்கட்டமாக தலா மூவாயிரம் ரூபா அண்மையில் யாழ். மாநகரசபை அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. [த-30]

தாட்சருக்கு ஹிட்லர் மீசை!

லண்டன், டிச. 3

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் தொங்க விடப்பட்டிருந்த முன்னாள் பிரதமர் திருமதி மார்கரட் தாட்சரின் உருவப் படத்தில் "ஹிட்லர் மீசை" கீறப்பட்டிருந்தது. யாரோ ஒருவர் இதனைச் செய்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அதை அடுத்து தாட்சரின் அந்த உருவப்படம் அங்கிருந்து அகற்றப்பட்டது.

கடந்த வாரம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. [ஒ]

சுகாதார வருடம்

வண்ணார்பண்ணை, டிச. 3

எதிர்வரும் 1993 ஆம் ஆண்டை சுகாதார வருடமாக யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் பிரகடனப்படுத்தவுள்ளது. சுயதொழில் முறையினை ஏற்படுத்திக் கொடுக்கவும் இணையம் முன்வந்துள்ளது. [த162]

எதிர்கால சந்ததிக்கு—நாம் வனவளத்தை பரிசாக வழங்குவோம்

கொப்பேகடுவ மரணம் குறித்து......

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஏனையோரும் கொல்லப்பட்டதாக ஊர்ஜிதம் செய்தது என்பதும் தெரிந்ததே.

தமது நிலக்கண்ணி வெடித் தாக்குதலிலேயே கொப்பேகடுவ குழுவினர் உயிரிழந்தனர் என்பதை விடுதலைப் புலிகளும் அறிவித்திருந்தனர்.

ஆனால்—

நேற்று கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் பங்குபற்றிய திருமதி லாலனி கொப்பேகடுவ, தமது கணவர் அவர் பயணம் செய்த ஜீப்பில் பொருத்தப்பட்டிருந்த குண்டு வெடித்தே உயிரிழந்தார் என்று குற்றஞ்சாட்டினார்.

"ஜீப்பில் பொருத்தப்பட்ட குண்டு வெடித்தே எனது கணவர் கொல்லப்பட்டார் என்பதை நான் நிச்சயப்படுத்திக் கூறுகிறேன். அதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன.

"அரசாங்கம் கூறுவது போல கண்ணிவெடியில் எனது கணவர் கொல்லப்படவில்லை.

"எனது கணவருக்கு இருந்த செல்வாக்கைக் குறைக்கவும், அவரை யுத்த அரங்கிலிருந்து அப்புறப்படுத்தவும் இராணுவ உயர்பீடத்தினராலும் அதிகாரம் உள்ளவர்களாலும் இக் குண்டு வெடிப்பு நடத்தப்பட்டது.

"இராணுவத்தின் உள்ளேயே அதன் தலைமை அதிகாரிகள் மத்தியில் நிலவும் போட்டி, பகைமை போன்றவையும் இச்சம்பவத்துக்குக் காரணம்.

கொப்பேகடுவவின் அதிகாரங்களைக் குறைக்கவும், இராணுவத்திலிருந்து அவரின் முக்கியத்துவத்தையும் நீக்கவும் செய்யப்பட்ட சதியே இது.

"ஆகவே இச்சம்பவம் குறித்து தீவிர விசாரணை செய்ய சர்வதேச நீதி விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்''. — இவ்வாறு திருமதி கொப்பேகடுவ செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

ஏராளமான செய்தியாளர்கள் பங்கு பற்றிய இந்த மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உட்பட அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களும் பங்குபற்றினர்.

இச்சம்பவம் குறித்து சர்வதேச விசாரணைக் குழு நியமிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை அனைத்துக் எதிர்க் கட்சிகளும் ஆதரிப்பதாக செய்தியாளர் மாநாட்டில் பங்கு பற்றிய முன்னாள் அமைச்சரும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர்களில் ஒருவரான காமினி திஸநாயக்கா தெரிவித்தார்.

பிரிட்டனின் முன்னாள் இராணுவ வெடிகுண்டு நிபுணர் திரு. வோகரின் முடிவின்படி கொப்பேகடுவ பயணம் செய்த வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்தே கொப்பேகடுவவும் ஏனைய தளபதிகளும் உயிரிழந்தனர் என்று காமினி திஸநாயக்க இங்கு கூறினார்.

இந்த குண்டுவெடிப்புச் சம்பவம் குறித்து விசாரிக்க சர்வதேச விசாரணைக் குழு நியமிக்கப்பட வேண்டும் எனக்கோரி பிரதமரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜேதுங்கவுக்கு திருமதி கொப்பேகடுவ மனுச் செய்திருப்பதாக செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்த மனு தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் விஜேதாஸ, கொப்பேகடுவவின் மனைவிக்கு கடிதம் ஒன்றை எழுதியிருப்பதாகவும் —

அக்கடிதத்தில் குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து ஆராய சர்வதேச விசாரணைக் குழு ஒன்றை நியமிக்க அரசு இணங்கியிருப்பது பற்றிக் குறிப்பிட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்த விசாரணைக் குழுவில் இடம்பெற வேண்டிய ஆணையாளர்களைத் தருமாறு — ஐக்கிய நாடுகள் சபை, அணிசேரா இயக்கம், பொதுநலவாய நாடுகள் அமைப்பு, சார்க் அமைப்பு ஆகியவற்றில் எந்த அமைப்பைக் கேட்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ள ஜனாதிபதி விரும்புவதாக திரு. விஜேதாஸ அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திருமதி கொப்பேகடுவவின் பதில் கிடைத்ததும், உத்தேச விசாரணைக் குழுவை அமைப்பதற்கான நடைமுறை ஒழுங்குகளை மேற்கொள்ளும்படி ஜனாதிபதி சட்டமா அதிபருக்குப் பணிப்புரை வழங்குவார் என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-எ-5-6)

பல்கலையில் புதிய துறை

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் புறநிலைப் படிப்புகள் அலகு என்ற புதிய துறையை ஆரம்பிப்பதற்கு பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கி உள்ளது. [த-எ]

தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடம்

1). சாரதி: [வாகனம் ஓட்டுநர்கள்]

இலேசான பாரமான வாகனங்கள்

கல்வித் தகைமை: 8 ம் வகுப்பு சித்தி

வயது: 18 - 30 வரை **உயரம்:** 5' — 5' 6'' வரை

திருமணமாகாதவர் மட்டும். சாரதி வேலையில் குறைந்தது 5 வருட அனுபவமுள்ளவர்களும், அத்தாட்சிப் பத்திரங்களுடன் நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல்துறையின் தலைமைச்செயலகத்திற்கு 10 - 12 - 92 வரை சமுகந்தரவும்.

2) உப பரிசோதகர் / காவலர் தரங்கள்:

தகைமைகள்: 8 ம் வகுப்பு தொடக்கம் க. பொ. த. [உயர்தரம் வரை]

உயரம்: 5' - 6'' **வயது:** 18 - 30 வரை

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 10 - 12 - 92 வரை நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல் துறையின் அலுவலகத்திற்கு சமுகந்தரவும். தபால் மூலம் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. ஆண் /பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பா. நடேசன்.
பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை

(சி-3931)

மரண அறிவித்தல்கள்

செல்வி அனிற்றா ஆனந்தி

செல்வி அனிற்றா ஆனந்தி (வயது 5) 2-12-92 நேற்று மாலை காலமாகிவிட்டார். அன்னார் சுன்னாகத்தைச் சேர்ந்த திரு. செபமாலை கீத பொன்கலன் (விரிவுரையாளர், யாழ். தொழில் நுட்பக் கல்லூரி), ஜெயசீலி ஞானமணி ஆகியோரின் ஏக புத்திரியும், செல்வன் றஜீவ் ரூஸ்வெல்ட் (மாணவன் ஆண்டு- 3, B புனித ஜோண் பொஸ்கோ மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புத் தங்கையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03-12-92) பி. ப. 3, 30 மணிக்கு 52, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலிருந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(23486)

தகவல்:
செபமாலை கீத பொன்கலன்

நாகலிங்கம் சுப்பிரமணியம்

[இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்]

நாகலிங்கம் சுப்பிரமணியம் அவர்கள் 1-12-92, செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 30 மணியளவில் சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற முத்துக்குமாரு தம்பதிகளின் மருமகனும், திருமதி இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், திரு. சிவகுமாரன் (கலாநிதி - அமெரிக்கா), திரு. சிறிகுமாரன் (கலாநிதி - பிலிப்பைன்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி இன்பா, எலிசா ஆகியோரின் அன்பு மாமனரும், செல்வன் இராகவனின் அன்புப் பேரனும், திரு. நா. கனகசபை, திரு. நா. சுந்தரம், திரு. நா. தாமோதரம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி த. இராசேஸ்வரி, திரு. க. சுந்தரேசன் (இறப்பர் - சுன்னாகம் பிரதேச சபை), திரு. க. சுந்தரேஸ்வரன் (பல் வைத்தியர் - மானிப்பாய்) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 1-12-92 அன்று மாலை 3 மணியளவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும். ஈமக்கிரியைகளில் பங்குபற்றியோருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:
திருமதி இ. சுப்பிரமணியம்
(மனைவி)

'இராஜகிரி'
86 A,
சிவன் வடக்கு வீதி,
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

(23481)

மரியாம்பிள்ளை அருளானந்தம்

[முன்னாள் யாழ்ப்பாணம் சிறைச்சாலை ஓவசியர், சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய முன்னாள் சங்கிலித்தாம்]

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த மரியாம்பிள்ளை அருளானந்தம் அவர்கள் நேற்று காலமாகிவிட்டார். இவர் அமலோற்பவத்தின் அன்புக் கணவரும், றோசாறியோ ராணி, கிறேமர் அல்பிரட், இம்மானுவேல் (தோலகட்டி உற்பத்திப் பொருள் விற்பனைப் பிரதிநிதி), ஜெறாட், கிளேறா பிரான்சிஸ்கா (வயலின் ஆசிரியை உடுவில் மகளிர் கல்லூரி, விரிவுரையாளர் இறையியல் கல்லூரி மருதனார்மடம்), அந்தோனிப்பிள்ளை (லங்கா சிமெந்து லிமிடெட்), இமெல்டா புஷ்பம், மெற்றில்டா (மாணவி லங்கா ஆயுள்வேதக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சூ. பாக்கியநாதன் (கொழும்பு மாநகரசபை), மேரி றோஸ்றூத், மேரிறோஸ், சூ. ஆலோசியஸ்தாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அ. சூசைப்பிள்ளை, வைத்தியகலாநிதி ஜி. ஜோர்ஜ் (சமாதான நீதவான்), பா. விக்ரோஸ், வைத்திய கலாநிதி ஜி. எட்வேட், யோ. ஞானப்பிரகாசம் ஆகியோரின் அன்பான மைத்துனரும், ம. வெலிச்சோர் ஆபரணம் (முன்னாள் தொழில் இலாகா ஊழியர்), மாக்கிறெட், ஞானமலர், மரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருட்திரு. ஞா. அற்புதராசா (அ.ம.தி) அருட்சகோதரர் சூ. அல்பிரட் (அ.ம.தி) ஆகியோரின் மாமனாரும், அருட்சகோதரர் லெ. ஜெரோம் (அ.ம.தி) அவர்களின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து, புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜி. ஜோர்ஜ் (வைத்திய கலாநிதி)
மனைவி, பிள்ளைகள்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

(5617)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03-12-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.